


புதுகை
# வரலாறு
நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351

ISSN: 2582–5518




சனி ❖ ஆகஸ்ட். 26, 2023 சென்னை & புதுக்கோட்டை 4 பக்கம் ❖ வரலாறு 8 ❖ இதழ் 323 ❖ ரூ.10

## தமிழக அரசின் பள்ளிகளில் காலை உணவு திட்டம்

# விரிவாக்கம்

## திருக்குவளையில், மறைந்த முன்னாள் முதல்வர் கருணாநிதி படித்த பள்ளியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று தொடங்கி வைத்தார்



**நாகப்பட்டினம் ,ஆக. 26–**

**தமிழகம் முழுவதும் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு காலை உணவு வழங்கும் விரிவாக்க திட்டத்தை, திருக்குவளையில், மறைந்த முன்னாள் முதல்வர் கருணாநிதி படித்த பள்ளியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று வெள்ளிக்கிழமை தொடங்கி வைத்தார்.**

தமிழகத்தில் உள்ள அரசுப் பள்ளிகளில் படிக்கும் ஏழை மாணவர்களின் கல்வியை ஊக்குவிக்கவும், ஊட்டச்சத்து குறைபாட்டை போக்கவும், கற்றல் இடைநிற்றலை தவிர்க்கவும் அரசுப் பள்ளிகளில் காலை சிற்றுண்டி திட்டம் அமல்படுத்தப்படும்என்று சட்டப்பேரவையில் 110-வது விதியின் கீழ் முதல்வர் ஸ்டாலின் கடந்த ஆண்டு மே 7-ம் தேதி அறிவித்தார். முதலில் இத்திட்டம், சென்னை மாநகராட்சி பள்ளிகள், தொலைதூர கிராமங்களில் உள்ள பள்ளிகளில் தொடங்கப்படும் என்றும். பின்னர், படிப்படியாக அனைத்துபள்ளிகளுக்கும் விரிவுபடுத்தப்படும் என்றும் அறிவித்தார்.

அந்த வகையில் முதல் கட்டமாக, சில மாநகராட்சிகள், நகராட்சிகள்,தொலைதூர கிராமங்களில் உள்ள அரசுப்பள்ளிகளில் 1முதல் 5-ம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவிகளுக்கு அனைத்து பள்ளி வேலை நாட்களிலும் காலையில் சத்தான சிற்றுண்டி வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு, அரசாணையும் வெளியிடப்பட்டது. கடந்த 2022 செப்.15-ம் தேதி அண்ணா பிறந்தநாளில், மதுரை நெல்பேட்டை ஆதிமூலம் மாநகராட்சி தொடக்கப் பள்ளியில் காலை உணவு திட்டத்தை முதல்வர் ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.

கடந்த மார்ச் 1-ம் தேதி இத்திட்டம் விரிவாக்கம் செய்யப்பட்டது. இதையடுத்து, 417 மாநகராட்சி பள்ளிகளில் 43,681 பேர், 163 நகராட்சி பள்ளிகளில் 17,427 பேர், 728 வட்டாரம் மற்றும் கிராம ஊராட்சி பள்ளிகளில் 42,826 பேர், 237 தொலைதூர, மலைப்பிரதேச பள்ளிகளில் 10,161 பேர் என மொத்தம் 1,545 பள்ளிகளில் 1.14 லட்சம் மாணவ, மாணவிகள் பயன்பெற்றுவருகின்றனர். இந்த திட்டத்துக்கு தற்போது ரூ.33.56 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தை செயல்படுத்த சமூகநலம், ஊரகவளர்ச்சி, நகராட்சி நிர்வாகம், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் உள்ளிட்ட பல்வேறு துறைகளின் அலுவலர்களை கொண்ட மாநில, மாவட்ட மற்றும் பள்ளி அளவிலான கண்காணிப்பு குழுக்கள் அமைக்கப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில், ''மாநிலம் முழுவதும் உள்ள 31,008 அரசுப் பள்ளிகளுக்கு இத்திட்டம் விரிவுபடுத்தப்படும். இதன்மூலம் 16 லட்சம் மாணவர்கள் பயன்பெறுவார்கள். இதற்காக ரூ.404 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது'' என்று முதல்வர் ஸ்டாலின் கடந்த 15-ம் தேதி சுதந்திர தின உரையில் அறிவித்தார்.

அதன்படி, நாகப்பட்டினம் மாவட்டம் திருக்குவளையில், மறைந்த முன்னாள் முதல்வர் கருணாநிதி பயின்ற ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் காலை உணவு விரிவாக்க திட்டத்தை முதல்வர் இன்று காலை தொடங்கி வைத்து, பள்ளிக் குழந்தைகளுடன் உணவு சாப்பிட்டார். அப்போது மாணவர்களுடன் முதல்வர் உரையாடினார்.

கட்சி பேதமின்றி, அனைத்து கட்சி எம்.பி.க்கள், எம்எல்ஏக்களும் இன்று இத்திட்டத்தை தொடங்கி வைக்குமாறு முதல்வர் ஏற்கெனவே வேண்டுகோள் விடுத்திருந்தார். அதன்படி, மக்கள் பிரதிநிதிகள் தங்கள் பகுதிகளில் உள்ள பள்ளிகளில் இத்திட்டத்தை தொடங்கி வைத்தனர். சென்னையில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் இந்த திட்டத்தை தொடங்கி வைத்தார்.





▸ புதுக்கோட்டை திருவப்பூர் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்தில் வரலட்சுமி நோன்பை முன்னிட்டு அம்மனுக்கு சிறப்பு அபிஷேகங்கள் எலுமிச்சை பழம் மற்றும் அலங்காரம் தீபாரதனை நடைபெற்றது. திரளான பக்தர்கள் வருகை தந்து அம்பாளை தரிசனம் செய்தனர். கோவில் வளாகத்தில் சுமார் 500க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்ட திருவிளக்கு பூஜையும் வெகு சிறப்பாக நடைபெற்றது.

## அமைச்சர் செந்தில் பாலாஜியின் நீதிமன்றக் காவல் ஆக.28 வரை நீட்டிப்பு: சிறப்பு நீதிமன்றம் உத்தரவு

**சென்னை,ஆக. 26–**

**அமைச்சர் செந்தில் பாலாஜியின் நீதிமன்ற காவலை ஆகஸ்ட் 28ம் தேதி வரை நீட்டித்த எம்பி, எம்எல்ஏக்கள் மீதான வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றம், அன்றைய தினம் அவரை நேரில் ஆஜர்படுத்த சிறைத்துறைக்கு உத்தரவிட்டுள்ளது.**

சட்டவிரோத பணபரிமாற்ற தடைச் சட்ட வழக்கில் கடந்த ஜூன் 14-ம் தேதி அமலாக்கத் துறை அதிகாரிகள், அமைச்சர் செந்தில் பாலாஜியை கைது செய்தனர். அவரது கைது சட்டப்படியானது என உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இதைத்தொடர்ந்து அமைச்சர் செந்தில் பாலாஜியை அமலாக்கத்துறை 5 நாட்கள் காவலில் எடுத்து விசாரித்தது. இந்த விசாரணை முடிந்து, கடந்த ஆகஸ்ட் 12ம் தேதி அமைச்சர் செந்தில் பாலாஜியை அமலாக்கத்துறை சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியது. இதைத்தொடர்ந்து அவரது காவலை ஆகஸ்ட் 25-ம் தேதி வரை நீட்டித்து நீதிமன்றம் உத்தரவிட்டது.



அன்றைய தினமே, செந்தில்பாலாஜி மீது 120 பக்கங்களுக்கும் மேற்பட்ட குற்றபத்திரிகையும், 3 ஆயிரம் பக்கங்களை கொண்ட ஆவணங்களையும் அமலாக்கத் துறை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தது. இந்நிலையில், அமைச்சர் செந்தில் பாலாஜிக்கு எதிராக அமலாக்கத்துறை தாக்கல் செய்த வழக்கை, சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள எம்பி., எம்எல்ஏக்கள் மீதான வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றத்துக்கு மாற்றி முதன்மை அமர்வு நீதிமன்ற நீதிபதி எஸ்.அல்லி உத்தரவிட்டிருந்தார்.

சென்னை முதன்மை அமர்வு நீதிமன்ற உத்தரவுப்படி, அமைச்சர் செந்தில் பாலாஜியின் நீதிமன்ற காவல் நேற்றுடன் (ஆக.25) முடிவடைந்தது. இதையடுத்து, புழல் சிறையில் இருந்து அமைச்சர் செந்தில் பாலாஜி சிறப்பு நீதிமன்ற நீதிபதி சிவக்குமார் முன்பு காணொளி மூலம் ஆஜர்படுத்தப்பட்டார். வழக்கை விசாரித்த நீதிபதி, செந்தில் பாலாஜியின் நீதிமன்ற காவலை வரும் 28ம் தேதி வரை நீட்டித்து உத்தரவிட்டார். மேலும், அன்றைய செந்தில் பாலாஜியை நீதிமன்றத்தில் நேரில் ஆஜர்படுத்த சிறைத்துறையினருக்கு நீதிபதி உத்தரவிட்டார்.

## அதிமுக பொதுக்குழு தீர்மானங்கள் செல்லும்

# ஓபிஎஸ் உள்ளிட்டோரின் 4 மனுக்களை தள்ளுபடி செய்து உயர்நீதிமன்றம் உத்தரவு

**சென்னை ,ஆக. 26–**

**கடந்தாண்டு ஜூலை 11ம் தேதி நடந்த அதிமுக பொதுக்குழு செல்லும் என்று ஏற்கெனவே உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளதால், அந்த பொதுக்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் செல்லும் என தீர்ப்பளித்துள்ள சென்னை உயர் நீதிமன்றம், தீர்மானங்களை எதிர்த்து ஓபிஎஸ் உள்ளிட்டோர் தாக்கல் செய்த மனுக்களை தள்ளுபடி செய்து உத்தரவிட்டுள்ளது.**



அதிமுக பொதுக்குழுக் கூட்டத்துக்கு தடைவிதிக்க கோரி ஓபிஎஸ் தொடர்ந்த வழக்கை விசாரித்த சென்னை உயர்நீதிமன்ற தனிநீதிபதி, பொதுக்குழுக் கூட்டம் நடத்தலாம் என்று உத்தரவிட்டார். இதனைத் தொடர்ந்து ஓபிஎஸ் தொடர்ந்த மேல்முறையீட்டு வழக்கை விசாரித்த இரு நீதிபதிகள் அமர்வு அளித்த உத்தரவின் அடிப்படையில் அந்தப் பொதுக்குழுக் கூட்டத்தில் ஒற்றைத் தலைமை தொடர்பாக எந்த தீர்மானமும் நிறைவேற்றப் படவில்லை. அதிமுக பொதுக்குழு ஜூலை 11-ம் தேதி மீண்டும் கூடும் என்று அறிவிக்கப்பட்டது.

2022 ஜூலை 11ம் தேதி கூட்டப்படவிருந்து அதிமுக பொதுக்குழுக் கூட்டத்திற்கு தடை விதிக்க கோரி ஓபிஎஸ் தரப்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் மீண்டும் மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கை விசாரித்த நீதிபதி கிருஷ்ணன் ராமசாமி, அதிமுக பொதுக்குழுவை நடத்த தடையில்லை என்று தீர்ப்பளித்தார். இதனையடுத்து, அவைத்தலைவர் தமிழ்மகன் உசேன் ஒப்புதல் பெறப்பட்டு 16 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. மேலும் கட்சியின் இடைக்காலப் பொதுச் செயலாளராக எடப்பாடி பழனிசாமி தேர்வு செய்யப்பட்டார். மேலும் கட்சியின் ஒருங்கிணைப்பாளர், இணை ஒருங்கிணைப்பாளர் பதவிகள் ரத்து செய்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இதைத்தொடர்ந்து, ஜூலை 11ம் தேதி நடந்த அதிமுக பொதுக்குழுக் கூட்டத்தை செல்லாது என அறிவிக்கக்கோரியும், இந்த பொதுக்குழு சட்டவிரோதமானது என அறிவிக்கக் கோரியும் ஓபிஎஸ் மற்றும் அவரது ஆதரவாளர்கள் தரப்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கை விசாரித்த உயர் நீதிமன்றம், ஜூலை 11ம் தேதி நடைபெற்ற அதிமுக பொதுக்குழு செல்லும் என்று தீர்ப்பளித்தது. இந்த தீர்ப்பை எதிர்த்து ஓபிஎஸ் மற்றும் அவரது ஆதரவாளர் வைரமுத்து சார்பில் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்றம், அதிமுக பொதுக்குழு செல்லும் என்றும், பொதுக்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் குறித்து உயர் நீதிமன்றத்தை நாடி நிவாரணம் பெற்றுக் கொள்ளலாம் என தீர்ப்பளித்திருந்தது. இதைத்தொடர்ந்து, அதிமுக பொதுக்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களுக்கு தடை விதிக்கக் கோரி ஓபிஎஸ் மற்றும் அவரது ஆதரவாளர்களான வைத்திலிங்கம், மனோஜ் பாண்டியன் மற்றும் ஜேசிடி பிரபாகர் ஆகியோர் சென்னை உயர் நீதிமன்றத்தில் தனித்தனியே வழக்கு தொடர்ந்தனர். இந்த வழக்குகளை விசாரித்த தனி நீதிபதி குமரேஷ்பாபு அதிமுக பொதுக்குழு தீர்மானங்களுக்கு தடை விதிக்க முடியாது என்று இடைக்கால உத்தரவிட்டிருந்தார். இந்த இடைக்கால உத்தரவை ரத்து செய்யக் கோரியும், உத்தரவுக்கு தடை விதிக்கக் கோரியும் ஓபிஎஸ் உள்ளிட்ட 4 பேரும் மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்தனர்.

இந்த மேல்முறையீட்டு வழக்குகள் நீதிபதிகள் மகாதேவன் மற்றும் முகமது சபீக் ஆகியோர் அடங்கிய அமர்வு முன்பு விசாரணைக்கு வந்தது. கடந்த ஏப்ரல் மாதம் இந்த வழக்குகளின் இறுதி விசாரணை தொடங்கியது. 7 நாட்கள் இந்த வழக்கில் இருதரப்பிலும் வாதங்கள் முன்வைக்கப்பட்டன. இதையடுத்து வழக்கை தேதி குறிப்பிடாமல் தீர்ப்புக்காக நீதிபதிகள் ஒத்திவைத்திருந்தனர்.

இந்நிலையில் இந்த வழக்கில் நேற்று நீதிபதிகள் பிறப்பித்த தீர்ப்பில், "அதிமுக பொதுக்குழு செல்லும் என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. எனவே, அந்த பொதுக்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் தலையிட முடியாது. அதிமுக பொதுக்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களுக்கு தடை விதிக்கக் கோரி ஓபிஎஸ் உள்ளிட்ட 4 பேர் தாக்கல் செய்த மனுக்கள் தள்ளுபடி செய்யப்படுகின்றன" என உத்தரவிட்டனர். அதேபோல், கட்சியிலிருந்து ஓபிஎஸ் உள்ளிட்ட 4 பேரை நீக்கி நிறைவேற்றப்பட்ட சிறப்பு தீர்மானத்துக்கு தடை விதிக்கக் கோரிய கோரிக்கையையும் நீதிபதிகள் ஏற்க மறுத்து உத்தரவிட்டுள்ளனர்.

# "தேமுதிகவில் எந்த தொய்வும் இல்லை" விஜயகாந்த் பிறந்தநாள் நிகழ்வில் பிரேமலதா விவரிப்பு

**சென்னை,ஆக. 26–**

**"தேமுதிகவில் எந்தத் தொய்வும் இல்லை. விஜயகாந்த் நன்றாக இருக்கிறார். கட்சித் தொண்டர்கள், அவரது உடல்நிலை குறித்து ஆயிரம் பேர் ஆயிரம் சொன்னாலும், யாரும் எதற்கும் கவலைப்படாதீர்கள். விஜயகாந்த் நம்முடன் நூறாண்டு காலம் நிச்சயம் இருப்பார்" என்று தேமுதிக பொருளாளர் பிரேமலதா விஜயகாந்த் கூறினார்.**



தேமுதிக தலைவர் விஜயகாந்தின் 71-வது பிறந்தநாளையொட்டி, அக்கட்சியின் பொருளாளர் பிரேமலதா விஜயகாந்த் நேற்று சென்னையில் செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவரிடம், தேமுதிக தலைவர் பொறுப்பு விஜய பிரபாகரனுக்கு வழங்கப்படுமா என்பது குறித்து கேள்வி எழுப்பப்பட்டது. அதற்கு பதிலளித்த அவர், "என்னுடன் சேர்த்து இங்கு இருக்கக்கூடிய தமிழகத்தைச் சேர்ந்த பலருக்கும் கட்சியில் பொறுப்பு வழங்கியவர் விஜயகாந்த். எனவே, அவர்தான் யாருக்கு, எப்போது, என்ன பொறுப்பு கொடுக்க வேண்டும் என்பது குறித்து முடிவு செய்வார். சென்னையில் விரைவில் தேமுதிக பொதுக்குழுக் கூட்டம் நடத்தப்படும்.

தேமுதிகவில் எந்தத் தொய்வும் இல்லை. தமிழகம் முழுவதும் நான் ஏதாவது ஒரு நிகழ்ச்சிக்காக சென்று கொண்டுதான் இருக்கிறேன். கட்சி நல்ல ஆரோக்கியமாக இருக்கிறது. கட்சிக்கு எந்தத் தொய்வும் இல்லை. கட்சியில் ஒரு பிரச்சினையும் இல்லை. இன்னும் நாங்கள் சாதிக்க வேண்டியது நிறைய உள்ளது. விஜயகாந்த் எந்த இலக்கை நோக்கை இந்த கட்சியைத் தொடங்கினாரோ, அந்த இலக்கை நாங்கள் நிச்சயம் அடைவோம்" என்றார்.

சென்னை சாலைகள் குறித்த கேள்விக்கு பதிலளித்த அவர், "சென்னையில் இருக்கும் அனைத்து சாலைகளும் இன்றைக்கு படுமோசமாக இருக்கிறது. மழைநீர் வடிகால் மற்றும் மெட்ரோ பணிகளுக்காக பல்வேறு இடங்களில் பள்ளங்களைத் தோண்டிவிட்டு அப்படியே வைத்துள்ளனர். சிங்காரச் சென்னை என்றனர், சிங்கப்பூருக்கு இணையான சென்னை என்றனர். எங்களுக்கு அதெல்லாம் வேண்டாம் முதல்வரே, சிறப்பான சென்னையை கொடுங்கள் அதுபோதும் என்று மக்கள் சார்பாக கேட்டுக் கொள்கிறேன்.

சென்னையில் இருசக்கர வாகனத்தில் பயணிப்பவர்களிடம் உங்களது ஆட்சியைப் பற்றி கேட்டுப் பாருங்கள். பலருக்கும் முதுகுத்தண்டு வலி ஏற்பட்டிருக்கிறது. குண்டும் குழியுமான சென்னை சாலைகளில் பயணிக்க முடியாமல், அனைத்து வாகனங்களும் பழுதடைந்து, பலரும் மிகப் பெரிய சிரமத்துக்கு உள்ளாகி இருக்கின்றனர். எனவே, அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லாதபட்சத்தில், சென்னை மாநகராட்சியைக் கண்டித்து தேமுதிக ஒரு மாபெரும் ஆர்ப்பாட்டத்தை நடத்துவோம்" என்றார்.

முன்னதாக, சென்னை கோயம்பேட்டில் உள்ள தேமுதிக தலைமை அலுவலகத்தில் விஜயகாந்த் தொண்டர்களை சந்தித்தார். உடல் நலக்குறைவு காரணமாக இருக்கையில் அமர்ந்தபடி, தொண்டர்களைப் பார்த்து உற்சாகமாக கைகளை அசைத்து தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார். இதைத் தொடர்ந்து கட்சி நிர்வாகிகளுக்கு நலத்திட்ட உதவிகள் மற்றும் சிறப்பு விருந்து வழங்கப்பட்டது. தனது மகன் சண்முகபாண்டியன் நடித்துள்ள 'படைத் தலைவன்' திரைப்படத்தின் பர்ஸ்ட் லுக் போஸ்டரை விஜயகாந்த் வெளியிட்டார்.

விழாவில் கலந்துகொள்ள வந்திருந்த தொண்டர்கள் மத்தியில் பிரேமலதா விஜயகாந்த் பேசும்போது, "கடந்த ஒரு வாரத்துக்கு முன்பு, கட்சியின் தலைவர் விஜயகாந்த் உடல்நிலை குறித்து தவறான செய்திகளை வெளியிட்ட ஊடகங்களுக்கு வன்மையான கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறேன். தயவுசெய்து ஊடகங்கள், யூடியூப் சேனல்கள் விஜயகாந்த் உடல்நிலை குறித்து யாரும் தவறாக எழுதாதீர்கள். காரணம், கடைக்கோடியில் இருக்கும் தேமுதிக தொண்டர்கள் கஷ்டப்படுகின்றனர். எனவே, விஜயகாந்த் நன்றாக இருக்கிறார். கட்சித் தொண்டர்களே, அவரது உடல்நிலை குறித்து ஆயிரம் பேர் ஆயிரம் சொன்னாலும், யாரும் எதற்கும் கவலைப்படாதீர்கள். விஜயகாந்த் நம்முடன் நூறாண்டு காலம் நிச்சயம் இருப்பார்" என்று அவர் கூறினார்.

# இன்று

# 26-8-23

கரிநாள்



அன்னை தெரசா பிறந்தநாள்

மாதுளம் பழச்சாறு பால் சேர்த்து பருகினால் இரும்புச்சத்து கிடைக்கும்
சக வருடம் 1945 பாத்ரபதம் 04

| சோபகிருது ஆவணி 9 | AUG - SAT சனி | ஸஃபர் 8 வளர்பிறை 238 / 127 |
|---|---|---|

வளர். தசமி 33.41 (மா. 07.32) மூலம் 54.35 (கா.03.54) தியாஜ் 16.13, 51.00 அகஸ் 30.43 சித்த. கரிநாள். மதுரை சோமசுந்தரர் நரிகளை பரிகளாக்கிய திருவிளையாடல். தென்காசி சிவபெருமான் தெப்போற்சவம். குச்சனூர் ஸ்ரீசனி பகவான் சிறப்பு அபிஷேகம், ஆராதனை. கெருட தரிசனம் நன்று.

| | நல்லநேரம் | கௌ.த.நே. | இராகு | குளிகை | எமகண்டம் |
|---|---|---|---|---|---|
| காலை | 7.45-8.45 | 10.45-11.45 | 09.00 | 06.00 | 01.30 |
| மாலை | 4.45-5.45 | 9.30-10.30 | 10.30 | 07.30 | 03.00 |

சூலம்: கிழக்கு; பரிகாரம்: தயிர்; சிம்ம லக்னம் இருப்பு நா. 3 வி. 54; சந்திராஷ்டமம்: ரோகிணி; கரணம்: 12-1.30; சூரிய உதயம்: 6.04

கேட்டதெல்லாம் நம்பாதே. நம்பியதெல்லாம் சொல்லாதே

**இராசிபலன்**

| | |
|---|---|
| மேஷம் | உறுதி |
| ரிஷபம் | பாராட்டு |
| மிதுனம் | உதவி |
| கடகம் | சிரமம் |
| சிம்மம் | ஊக்கம் |
| கன்னி | நலம் |
| துலாம் | பரிவு |
| விருச்சி | நிறைவு |
| தனுசு | ஓய்வு |
| மகரம் | பணிவு |
| கும்பம் | நேர்மை |
| மீனம் | பாசம் |

## சிந்திப்போம்.... செயல்படுவோம்







# தமிழ் மொழியை காக்கும் போராட்டங்களில் ஆன்மிகவாதிகள் பங்களிக்க வேண்டும்: முதல்வர் ஸ்டாலின் வேண்டுகோள்




மயிலாடுதுறை , ஆக- 26

தமிழ் காக்கும் போராட்டம், சமூக சீர்திருத்த இயக்கம் உள்ளிட்ட அனைத்திலும் கடந்த காலத்தைப்போல, இன்றைய ஆன்மிகவாதிகளும் பங்களிக்க வேண்டும் என முதல்வர் மு.க.ஸ்டாலின் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மயிலாடுதுறை அருகே உள்ள தருமபுரம் ஆதீனம் கலைக் கல்லூரியின் 75-வது ஆண்டு பவள விழா நிறைவு நிகழ்ச்சி வியாழக்கிழமை

நடைபெற்றது. இதில் தமிழகமுதல்வர்மு.க.ஸ்டாலின் சிறப்பு அழைப்பாளராக பங்கேற்று பேசியதாவது: 16-ம் நூற்றாண்டில் குருஞானசம்பந்தரால் தொடங்கப்பட்ட இந்த மடம், அன்று முதல் இன்று வரை ஆன்மிகம், தமிழ், கல்வி, அறப்பணிகள், மருத்துவ சேவைகளில் ஈடுபட்டு வருகிறது. இது தொடர வேண்டும்.

தருமை ஆதீனத்துடன் எங்களுக்கு குடும்ப நட்பும் உண்டு. அறநிலையத் துறைக்கு நாங்கள் ஆற்றும் பணிகளை மடாதிபதிகள், நீதிபதிகள் பாராட்டுகின்றனர்.

அனைத்து நன்மைகளும் அனைவருக்கும் கிடைக்கக் கூடாது என்று ஏங்கும் ஒரு கூட்டம்தான் எங்களுக்கு எதிரான பரப்புரையில் ஈடுபடுகிறது. தருமபுரம் ஆதீனம் போன்ற நல்லிணக்கத்தையும், சகோதரத்துவத்தையும் விரும்புகிற சந்நிதானங்கள், தமிழக மக்கள் எங்களை ஆதரிக்கிறார்கள் என்பதே போதுமானது.

நாட்டுக்கும், மக்களுக்கும், பண்பாட்டுக்கும் ஆபத்து வரும்போதெல்லாம், ஆன்மிகப் பெரியோர்கள் அதற்கு எதிராக குரல் கொடுத்து போராடியுள்ளனர். இந்தி எதிர்ப்பு போராட்டம், தமிழ் காக்கும் போராட்டம், சமூக சீர்திருத்த இயக்கம் உள்ளிட்ட அனைத்திலும் ஆன்மிக வாதிகள் தங்கள் பங்களிப்பை கடந்த 100 ஆண்டுகளாக செலுத்தியது போல, இன்றைய ஆன்மிகவாதிகளும் பங்களிக்க வேண்டும்.

தமிழ் மொழி, தமிழகம், தமிழர்கள் இந்த மூன்றும் காப்பாற்றப்பட்டால்தான், இது போன்ற மடங்கள் தோற்றுவிக்கப்பட்டதன் நோக்கம் நிறைவேறும்.

இவ்வாறு முதல்வர் ஸ்டாலின் பேசினார்.

நூற்றாண்டு விழாவிலும்...: விழாவில் தருமபுரம் ஆதீனம் 27-வது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் பேசியது: இக்கல்லூரியின் வெள்ளிவிழால் அப்போதைய முதல்வர் கருணாநிதியும், பொன்விழாவில் அப்போதைய அமைச்சர் க.அன்பழகனும் கலந்துகொண்டார். தற்போது பவள விழாவில் முதல்வர் ஸ்டாலின் கலந்துகொண்டது மகிழ்ச்சி. அடுத்து நூற்றாண்டு விழாவுக்கும் இவர்கள்தான் ஆட்சியில் இருக்க வேண்டும். தமிழகத்தில் ஆன்மிக ஆட்சிதான் நடந்துகொண்டிருக்கிறது என்றார். முன்னதாக ஆதீனத்தின் சார்பில் முதல்வருக்கு பூரண கும்ப மரியாதை அளிக்கப்பட்டது.

விழவில் அமைச்சர்கள் பி.கே.சேகர்பாபு, சிவ. வீ.மெய்யநாதன், அன்பில் மகேஸ் பொய்யாமொழி, எம். பி. செ.ராமலிங்கம், மாவட்ட ஆட்சியர் ஏ.பி.மகாபாரதி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# நீரஜ் சோப்ரா 88.77 மீ. ஈட்டி எறிந்து அசத்தல் உலக தடகள இறுதிப் போட்டிக்கு டி.பி.மானுவும் தகுதி

புடாபெஸ்ட் , ஆக- 26

உலக தடகள சாம்பியன்ஷிப் தொடரின் ஈட்டி எறிதல் போட்டியில், இந்திய நட்சத்திர வீரர் நீரஜ் சோப்ரா 88.77 மீட்டர் தூரத்துக்கு ஈட்டி எறிந்து, இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றார். இதனால், அவர் தங்கம் வெல்வார் என்ற எதிர்பார்ப்பு மென்மேலும் வலுத்துள்ளது. இதனிடையே, மற்றொரு இந்திய வீரரான டி.பி.மானுவும் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றார்.

உலக தடகள சாம்பியன்ஷிப் தொடர் ஹங்கேரியில் உள்ள புடாபெஸ்ட் நகரில் இன்று தொடங்கியது. வரும் 27-ம் தேதி வரை நடைபெறும் இந்தத் தொடரின் ஈட்டி எறிதல் போட்டியின் தகுதிச் சுற்று நேற்று நடந்தது. இதில், இந்திய வீரர் நீரஜ் சோப்ரா தன் முதல் முயற்சியிலேயே 88.77 மீட்டர் தூரத்துக்கு ஈட்டி எறிந்து இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றார்.

88.77 மீட்டர் என்பது நீரஜ் சோப்ராவுக்கு நடப்பு சீசனில் சொந்த சாதனை தூரம் ஆகும். உலக தடகள சாம்பியன்ஷிப்பை பொறுத்தவரையில், தகுதிச் சுற்றில் 83 மீட்டர் தூரத்துக்கு ஈட்டி எறிந்தால் இறுதிச் சுற்றுக்கு நேரடியாக முன்னேறுவர் என்பது குறிப்பிடத்தக்கது. இன்றைய போட்டியில் மிகச் சிறப்பாக செயல்பட்ட நீரஜ் சோப்ரா, நாளை ஞாயிற்றுக்கிழமை 12 பேர் பங்கேற்கும் இறுதிப் போட்டியில் வெற்றி பெற்று தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றி சாதிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஈட்டி எறிதல் தகுதிச் சுற்றில் பங்கேற்ற மற்றொரு இந்திய வீரரான டி.பி.மானுவும் இறுதிச் சுற்றுக்குத் தகுதி பெற்றார். தகுதிச் சுற்றில் 81.31 மீட்டர் தூரத்துக்கு ஈட்டி எறிந்த டி.பி.மானு, குரூப் ஏ பட்டியலில் மூன்றாவது இடம் பிடித்து இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றார்.

25 வயதான நீரஜ் சோப்ரா, 2021-ம் ஆண்டு டோக்கியோ ஒலிம்பிக்கில் தங்கம், 2018-ம் ஆண்டு ஆசிய விளையாட்டில் தங்கம், அதே ஆண்டில் காமன்வெல்த் விளையாட்டில் தங்கம் வென்று அசத்தினார். கடந்த ஆண்டு டைமண்ட் லீக்கிலும் சாம்பியன் பட்டம் வென்றார். உலக தடகள சாம்பியன்ஷிப்பில் மட்டுமே நீரஜ் சோப்ரா இதுரை தங்கம் வெல்லவில்லை. கடந்த 2018-ம் ஆண்டு அமெரிக்காவில் நடைபெற்ற உலக தடகள சாம்பியன்ஷிப்பில் அவர் வெள்ளிப் பதக்கம் வென்றிருந்தார். தற்போது சிறந்த ஃபார்மில் இருப்பதால் நீரஜ் சோப்ரா தங்கப் பதக்கம் வெல்லக்கூடிய வீரர்களில் முதன்மையான வீரராக திகழ்கிறார்.

இம்முறை நீரஜ் சோப்ரா தங்கப் பதக்கம் வென்றால், துப்பாக்கி சுடுதல் வீரர் அபினவ் பிந்த்ராவுக்குப் பிறகு ஒலிம்பிக் மற்றும் உலக சாம்பியன்ஷிப் போட்டிகளில் தனிநபர் விளையாட்டில் தங்கப் பதக்கம் வென்ற 2-வது இந்தியர் என்ற பெருமையை பெறுவார்.

2008-ம் ஆண்டு ஒலிம்பிக்கில் அபினவ் பிந்த்ரா தங்கம் வென்றிருந்தார். இதன் மூலம் ஒலிம்பிக்கில் தனிபர் போட்டியில் தங்கம் வென்ற முதல் இந்திய வீரர் என்ற சாதனையை படைத்திருந்தார். இதன் பின்னர் அவர், 2006 -ம் ஆண்டு ஜாக்ரெப்பில் நடைபெற்ற உலக சாம்பியன்ஷிப்பில் தங்கம் வென்று அசத்தி இருந்தார்.

நீரஜ் சோப்ரா இந்த சீசனில் இரண்டு உயர்தரப் போட்டிகளில் மட்டுமே பங்கேற்றார். அவை இரண்டிலும் தங்கம் வென்றிருந்தார். தோஹா மற்றும் லாசனே நகரில் நடைபெற்ற டைமண்ட் லீக்கில் அசத்திய அவர், அதன் பின்னர் இரு மாத இடைவெளிக்கு பின்னர் தற்போது முழுவீச்சில் உலக தடகள சாம்பியன்ஷிப் தொடருக்கு தயாராகி உள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்தத் தொடர் தொடங்குவதற்கு முன்பு நீரஜ் சோப்ரா கூறும்போது, "உலகின் சிறந்த விளையாட்டு வீரர்களுக்கு எதிராக மிக உயர்ந்த மட்டத்தில் போட்டியிடுவது மற்றும் நிலையான செயல் திறனை வெளிப்படுத்துவது நிச்சயமாக சவாலானதுதான். நான் எனது சிறந்ததைக் கொடுக்க விரும்புகிறேன், அது நடந்தால், நான் முன்பை விட நன்றாக வருவேன்" என்றது குறிப்பிடத்தக்கது.




# பொய்யாதநல்லூர் குழுமூரில் முதலமைச்சரின் காலை உணவு திட்ட தொடக்க விழா



அரியலூர், ஆக- 26

அரியலூர் மாவட்டம் பொய்யாதநல்லூர் மற்றும் குழுமூர் கிராமங்களில், முதலமைச்சரின் காலை உணவுத் திட்ட தொடக்க விழா நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

அரியலூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, பொய்யாதநல்லூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி வளாகத்தில் நடைபெற்ற, முதலமைச்சரின் காலை உணவு திட்ட தொடக்க விழாவுக்கு, அரியலூர் வருவாய் கோட்டாட்சியர் ராமகிருஷ்ணன் தலைமை வகித்தார். பள்ளியின் தலைமை ஆசிரியர் நீதிபதி வரவேற்று பேசினார். பொய்யாதநல்லூர் தொடக்கப்பள்ளியில் கல்வி பயிலும் மாணவ, மாணவிகளுக்கு, காலை உணவு வழங்கும் திட்டத்தை, அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் சின்னப்பா தொடங்கி வைத்து, பள்ளிக் குழந்தைகளுடன் அமர்ந்து உணவு அருந்தினார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் தீபா சங்கரி, அரியலூர் தாசில்தார் கண்ணன், வட்டார வளர்ச்சி அலுவலர் முத்துக்குமார், துணை வட்டார வளர்ச்சி அலுவலர் ஆனந்தன், ஊராட்சி மன்ற தலைவர் அன்பழகி, ஊராட்சி செயலாளர் ராசாத்தி மற்றும் அரசு அலுவலர்கள், பள்ளி குழந்தைகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

அரியலூர் மாவட்டம், செந்துறை தாலுக்கா, குழுமூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி வளாகத்தில் நடைபெற்ற, முதலமைச்சரின் காலை உணவு திட்ட தொடக்க விழாவுக்கு, அரியலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆனி மேரி ஸ்வர்ணா தலைமை வகித்தார்.

தமிழக போக்குவரத்து துறை அமைச்சரும், குன்னம் சட்டமன்ற உறுப்பினருமான எஸ் எஸ் சிவசங்கர், முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தை தொடங்கி வைத்து, பள்ளி குழந்தைகளுக்கு உணவு வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், செந்துறை ஒன்றிய சேர்மன் தேன்மொழி சாமிதுரை, குழுமூர் ஊராட்சி மன்ற தலைவர் புதுமலர் பூபதி, ஒன்றிய கவுன்சிலர் ரங்கநாதன், திமுக ஒன்றிய செயலாளர்கள் எழில் மாறன், செல்வராஜ், குழுமூர் சுமதி கருணாநிதி, பள்ளியின் தலைமை ஆசிரியர் ஜோதி மற்றும் அரசு அலுவலர்கள், பள்ளி மாணவ மாணவிகள் உள்பட, பலர் கலந்து கொண்டனர்.

# பள்ளிக் கல்வியில் ஆண்டுக்கு இருமுறை பொதுத் தேர்வு ஆபத்தானது முத்தரசன் கருத்து



சென்னை , ஆக- 26

பள்ளிக் கல்வியில் ஆண்டுக்கு இருமுறை பொதுத் தேர்வு நடத்துவது ஆபத்தானது என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில், ''ஒன்றிய அரசின் தேசியக் கல்விக் கொள்கை 2020 வழக்கொழிந்து போக வேண்டிய வருணாசிரம, சனாதான கருத்தியலின் நவீன வடிவமைப்பு என்பதால் நாடு முழுவதும் கடுமையான எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து அதனை நிறுத்தி வைத்து, அது தொடர்பான வல்லுநர் குழு அமைக்கப்பட்டது. இப்போது அந்த வல்லுநர் குழு நீண்ட சில நூறு பக்கங்கள் கொண்ட அறிக்கையை பரிந்துரைகளுடன் வெளியிட்டுள்ளது. இதில் பள்ளிக் கல்வி நிலையில் ஆண்டுக்கு இரு பொதுத் தேர்வு என்ற புதிய தேர்வு முறை அறிவிக்கப்பட்டுள்ளது. இரு முறை தேர்வில் எந்தத் தேர்வில் அதிக மதிப்பெண் பெற்றுள்ளதை மாணவர்கள் அடுத்த நிலைக்கு செல்ல பயன்படுத்திக் கொள்ளலாம் என்று கூறப்பட்டுள்ளது.

இதில் மாணவர்களுக்கு வாய்ப்பு வழங்குவதாக தெரிவித்திருந்தாலும், உண்மையில் பிற்படுத்தப்பட்ட மிகவும் பிற்படுத்தப்பட்டு, பட்டியலின பழங்குடி மாணவர்களை வடிகட்டி வெளியேற்றும் நோக்கம் கொண்டதாகும். ஏற்கெனவே தமிழ்நாட்டின் கோரிக்கையை நிராகரித்து நடைமுறைப்படுத்தி வரும் "நீட்" தேர்வு காரணமாக ஆயிரக்கணக்கில் பயிற்சி மையங்கள் உருவாகி பணம் பறிக்கும் கும்பல் கலாச்சாரம் வளர்ந்து வருகிறது. அதன் எதிர் விளைவாக அடித்தட்டு மக்களின் குழந்தைகளும் தேர்வு முறையால் அச்சப்பட்டு பதற்றமடையும் குழந்தைகளும் தற்கொலை சாவுக்கு நெட்டித் தள்ளப்பட்டு வருவதை தமிழ்நாடு கண்டு வருகிறது. இந்த நிலையில் பாஜக ஒன்றிய அரசு பள்ளிக் கல்வியில் ஆண்டுக்கு இருமுறை பொதுத் தேர்வு என்று அறிவித்திருப்பது, கல்வித் துறையில் தொடர்ந்து நடத்தும் தாக்குதலாகும்.

இதில் அண்மையில் ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித் ஷா ''பிற மொழிகளை (மாநில மொழி - தமிழ்நாட்டில் தமிழ்) தாய் மொழியாக கொண்டவர்கள் இந்தி மொழியை எதிர்ப்பின்றி ஏற்க வேண்டும் என்று அகங்காரத்துடன் பேசிய பேச்சுக்கு செயல் வடிவம் தரும் முயற்சியாகும். அரசின் வஞ்சகத் திட்டத்தை இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வன்மையாகக் கண்டிக்கிறது. ஆண்டுக்கு இருமுறை பொதுத் தேர்வு அறிவிப்பை திருப்பப் பெற வேண்டும் என வலியுறுத்துகிறது'' என்று முத்தரசன் தெரிவித்துள்ளார்.

# நதிநீர் பங்கிடு காவிரி மேலாண்மை ஆணையம் அறிக்கை தாக்கல் செய்ய உச்ச நீதிமன்றம் உத்தரவு



புதுடெல்லி , ஆக- 26

காவிரி நதிநீர் பங்கீடு தொடர்பாக, காவிரி மேலாண்மை ஆணையம் பிறப்பித்த உத்தரவுகளை கர்நாடக அரசு முழுமையாக செயல்படுத்துகிறதா என்பது குறித்து அறிக்கை தாக்கல் செய்ய ஆணையத்துக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

காவிரி நதிநீர் பங்கீட்டு வழக்கில் உச்ச நீதிமன்றம் பிறப்பித்த இறுதி தீர்ப்பின்படி கர்நாடகா தமிழகத்துக்கு வழங்க வேண்டிய காவிரி நீரை வழங்கவில்லை. இதுகுறித்து காவிரி மேலாண்மை ஆணையம் உத்தரவிட்டும் அதனை கர்நாடகா செயல்படுத்தவில்லை. இதையடுத்து தமிழக அரசு உச்ச நீதிமன்றத்தில் அவசர மனு ஒன்றை தாக்கல் செய்தது. அதில், ஆகஸ்ட் மாதத்தில் வழங்க வேண்டிய 37.9 டிஎம்சி நீரை உடனடியாக திறந்துவிட கர்நாடக அரசுக்கு உத்தரவிட வேண்டும் என்று கோரியிருந்தது.

இந்நிலையில் கர்நாடக அரசு சார்பில் பதில் மனு தாக்கல் செய்யப்பட்டது. அதில், நடப்பாண்டில் காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழை குறைவாகவே பொழிந்துள்ளது. இதனால் கிருஷ்ணராஜ சாகர், கபினி ஆகிய பிரதான அணைகள் நிரம்பவில்லை. இருப்பினும் கர்நாடக அணைகளில் இருந்து தமிழகத்துக்கு காவிரி நீர் திறக்கப்பட்டுள்ளது என தெரிவித்திருந்தது. இதையடுத்து வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி அமர்வு, காவிரி நதிநீர் பங்கீட்டு வழக்கை விசாரிக்க, நீதிபதிகள் பி.ஆர். கவாய், நரசிம்மா மற்றும் பி.கே. மிஸ்ரா ஆகியோர் அடங்கிய 3 நீதிபதிகள் கொண்ட புதிய அமர்வினை அமைத்து உத்தரவிட்டிருந்தார்.

இந்தபுதிய அமர்வில்காவிரி நதிநீர் பங்கீடு தொடர்பான வழக்கு வெள்ளிக்கிழமை விசாரணைக்கு வந்தது. அப்போது தமிழக அரசுத் தரப்பில், "கர்நாடக அரசு தண்ணீர் திறந்துவிடவில்லை என்றால், தமிழகத்தில் சாகுபடி செய்யப்பட்டுள்ள பயிர்கள் அனைத்தும் கருகிவிடும். தண்ணீர் திறப்பு விவகாரத்தில், கர்நாடக அரசு உச்ச நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை பின்பற்ற மறுக்கின்றது. எனவே, கர்நாடக அரசுக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடர நேரிடும்" என வாதிடப்பட்டது.

அப்போது கர்நாடக அரசுத் தரப்பில், "கர்நாடகாவில் இருந்து திறக்கப்படும் தண்ணீரை தமிழகம் முறையாக பயன்படுத்தாமல் வீணடித்துவிட்டது. கர்நாடகத்தைப் பொறுத்தவரை, இது வறட்சியான ஆண்டாக இருக்கிறது. அதேநேரம் போதிய மழை இல்லாததால், அணைகளில் தண்ணீர் குறைவாக இருக்கிறது. இந்த சூழலில், எங்களால் எப்படி தண்ணீர் திறந்துவிட முடியும். இருப்பினும், காவிரி மேலாண்மை ஆணையம் பிறப்பித்த உத்தரவின் அடிப்படையில், தமிழகத்துக்கு கர்நாடகாவில் இருந்துதண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது" என்று தெரிவிக்கப்பட்டது.

அப்போது குறுக்கிட்ட தமிழக அரசுத் தரப்பு வழக்கறிஞர்கள், "மிக குறைவான அளவு தண்ணீரையே தற்போது கர்நாடக அரசு விடுவித்துள்ளது. உச்ச நீதிமன்றம் ஏற்கெனவே உத்தரவிட்ட அளவு தண்ணீரைக்கூட கர்நாடக அரசு திறந்துவிடவில்லை. இந்த விவகாரத்தில், உச்ச நீதிமன்றம் பிறப்பித்துள்ள தீர்ப்பை முழுமையாக கர்நாடக அரசு பின்பற்றினால் போதும்" என்று வாதிடப்பட்டது.

இதையடுத்து வழக்கை விசாரித்த நீதிபதிகள் பிறப்பித்த தீர்ப்பில், "காவிரி மேலாண்மை ஆணையம் 15 ஆயிரம் கன அடி வீதம் தமிழகத்துக்கு தண்ணீர் திறந்துவிட வேண்டும் என்று உத்தரவு பிறப்பித்திருந்த நிலையில், அந்த உத்தரவை கர்நாடக அரசு முழுமையாக செயல்படுத்தி இருக்கிறதா என்பது குறித்து காவிரி மேலாண்மை ஆணையம் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும்" என உத்தரவிட்டு, வழக்கு விசாரணையை செப்டம்பர் 1ம் தேதிக்கு ஒத்திவைத்து உத்தரவிட்டனர்.

# குற்றாலத்தில் பயங்கர தீ விபத்து வெடித்து சிதறிய சிலிண்டர்கள்: 20 க்கும் மேற்பட்ட கடைகள் சாம்பல்



தென்காசி, ஆக. 26

குற்றாலத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் சிலிண்டர்கள் வெடித்து சிதறியதால் இருபதுக்கும் மேற்பட்ட கடைகள் சாம்பலானது. 10க்கும் மேற்பட்ட கடைகள் சேதமானது.

தென்காசி மாவட்டம் குற்றாலத்தில் ஆண்டு தோறும் ஜூன் மாதம் சீசன் துவங்கி ஆகஸ்ட் மாதம் வரை நீடிக்கும். இந்த சீசன் காலங்களில் குற்றாலநாதர் கோவிலைச் சுற்றி தற்காலிக கடைகள் அமைப்பதற்காக கோவில் நிர்வாகம் சார்பில் ஆண்டுதோறும் ஏலம் விடப்படுவது வழக்கம். ஏலம் எடுத்தவர்கள் குற்றாலநாதர் தெற்கு பிரகாரம், வடக்கு மற்றும் கீழ்பிரகாரம் பகுதியில் தற்காலிக கடைகள் அமைத்துள்ளனர். விதிமுறைகள் மீறி கோவிலைச் சுற்றி இடைவெளி இன்றி கடைகள் அமைக்கப் பட்டுள்ளன. இந்த ஆண்டு சீசன் ஜூலை மாதம் தான் துவங்கியது. ஆனால் இம்மாதம் முதல் வாரத்திலேயே சீசன் நிறைவு பெற்றுவிட்டது. தற்போது குற்றாலம் மெயின் அருவியில் ஆண்கள் பகுதியில் மட்டும் மிக மிக குறைவாக தண்ணீர் விழுகிறது.

இதனால் சுற்றுலா பயணிகளின் கூட்டம் குறைந்து விட்டது. குற்றாலநாதர் கோவில் தெற்கு பிரகாரம் பகுதியில் உள்ள ஒரு கடையில் நேற்று பிற்பகல் 2.30 மணி அளவில் திடீரென தீப்பிடித்துள்ளது. இதனால் கடையில் இருந்தவர்கள் அலறி அடித்துக் கொண்டு வெளியே ஓடி வந்தனர். காற்று வேகமாக வீசியதாலும் தொடர்ந்து இடைவெளி இன்றி கடைகள் இருந்ததாலும் அடுத்தடுத்த கடைகளுக்கு தீ மளமளவென பரவியது. இதனால் கடை வியாபாரிகள் பொருட்களை அப்படியே போட்டு விட்டு தப்பி ஓடினர். கடைகளில் ஏற்பட்ட தீ விபத்தில் சில கடைகளில் வைக்கப்பட்டிருந்த சிலிண்டர்கள் வெடித்து சிதறியது. இதனால் மேலும் பல கடைகளுக்கும் அருகில் சிற்றாற்றின் கரை பகுதியில் உள்ள மரங்களிலும் தீ பரவியது. பச்சை மரங்கள் தீக்கு இரையாகின. சிலிண்டர்கள் வெடித்தது பெரிய அளவிலான வெடிகுண்டு வெடித்ததை போன்ற சத்தத்தை எழுப்பியதால் வியாபாரிகள், சுற்றுலாப் பயணிகள் பீதி அடைந்தனர்.

தீ விபத்து குறித்து தீயணைப்பு நிலையத்திற்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. தென்காசி, செங்கோட்டை, கடையநல்லூர் சுரண்டை ஆகிய தீயணைப்பு நிலையங்களில் இருந்து 4 வாகனங்களில் விரைந்து வந்த தீயணைப்பு வீரர்கள் தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர். தீயணைப்பு வீரர்கள் பல மணி நேரம் போராடி தீயை கட்டுப் படுத்தினர். இருப்பினும் 20க்கும் மேற்பட்ட கடைகள் முற்றிலுமாக எரிந்து சாம்பலானது. 10க்கும் மேற்பட்ட கடைகள் சேதமானது. மேலும் குற்றாலநாதர் கோவில் புகை மண்டலத்தால் சூழப்பட்டது. தீ விபத்தில் சேதமான மதிப்பு ரூபாய் ஒரு கோடிக்கும் மேல் இருக்கும் என கூறப்படுகிறது.கடைகள் தீப்பிடித்து எரிந்ததும், சிலிண்டர்கள் வெடித்ததும் குற்றாலம் பகுதியில் பெரும் பரபரப்பையும், பதட்டத்தையும் ஏற்படுத்தியது. இனி வருங்காலங்களில் இதுபோன்ற விபத்துக்கள் ஏற்படாத வகையில் கடைகள் போதுமான இடைவெளி விட்டு அமைக்கவும், விதிமுறைகளை மீறாமல் இருக்கவும் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என அனைத்து தரப்பினரும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# முதலமைச்சர் காலை உணவு திட்டம் ஆறு பாதி அரசு தொடக்கப் பள்ளியில் தொடக்கம்






செம்பனார்கோயில், ஆக-26:

மயிலாடுதுறை மாவட்டம, செம்பனார்கோயில் ஊராட்சி ஒன்றியம், ஆறுபாதி ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் தமிழ்நாடு முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தை மாவட்ட ஆட்சியர் ஏ.பி. மகாபாரதி, மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் செ.இராமலிங்கம், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினரும், மயிலாடுதுறை மாவட்ட திமுக செயலாளருமான நிவேதா எம்.முருகன் ஆகியோர் தொடங்கி வைத்தனர்.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலின் நாகப்பட்டினம் மாவட்டம், திருக்குவளையில் மாநிலம் முழுவதும் உள்ள 1-ம் வகுப்பு முதல் 5-ம் வகுப்பு வரையிலான அனைத்து அரசு தொடக்கப் பள்ளியிலும் விரிவுபடுத்தப்பட்ட காலை உணவு திட்டத்தினை தொடங்கி வைத்தார்கள். இந்நிகழ்ச்சியினை, எல்.இ.டி. திரை மூலமாக திரையிடப்பட்டதை மாவட்ட ஆட்சியர், மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர், மாவட்ட ஊராட்சிக்குழுத் தலைவர், பார்வையிட்டனர்.

மயிலாடுதுறை மாவட்டத்தில், முதலமைச்சரின் காலை உணவு திட்டமானது செம்பனார்கோயில், சீர்காழி, கொள்ளிடம், குத்தாலம், மயிலாடுதுறை ஆகிய 5 ஒன்றியங்களுக்குட்பட்ட 386 தொடக்கப் பள்ளிகளிலும், மணல்மேடு, குத்தாலம், வைத்தீஸ்வரன்கோயில் ஆகிய பேரூராட்சிகளுக்குட்பட்ட 6 தொடக்கப் பள்ளிகளிலும் என மொத்தம் 392 தொடக்கப் பள்ளிகளில் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இதன்மூலம், 19 ஆயிரத்து 26 மாணவர்கள் பயன் பெறுவார்கள். மேலும், காலை உணவு திட்டத்தின் கீழ் திங்கட்கிழமைகளில் சேமியா உப்புமா, காய்கறி சாம்பாரும், செவ்வாய் கிழமைகளில் ரவா காய்கறி கிச்சடி, சாம்பார், புதன்கிழமைகளில் வெண் பொங்கல், காய்கறி சாம்பார், வியாழக்கிழமைகளில் அரிசி உப்புமா, காய்கறி சாம்பார், வெள்ளிகிழமைகளில் கோதுமை ரவா கிச்சடி, காய்கறி சாம்பார் தொடக்கப் பள்ளி மாணவ, மாணவிகளுக்கு வழங்கப்படும் என மாவட்ட ஆட்சியர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், ஊரக வளர்ச்சித்துறை திட்ட இயக்குநர் ஸ்ரீலேகா தமிழ்ச்செல்வன், மாவட்ட ஊராட்சிக்குழுத் தலைவர் உமா மகேஸ்வரி சங்கர், செம்பனார்கோயில் ஒன்றியக்குழுத் தலைவர் நந்தினி ஸ்ரீதர், ஒன்றியக் குழுத் துணைத் தலைவர் ப.பாஸ்கரன், மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர் துளசிரேகா ரமேஷ், மாவட்ட கூட்டுறவு தலைவர் ஞானவேல், ஒன்றியக் குழு உறுப்பினர் முத்துலெட்சுமி ராஜசேகர், ஆறுபாதி ஊராட்சி மன்றத் தலைவர் தமிழரசி கலியபெருமாள், ஆறுபாதி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி தலைமையாசிரியர் ஜி.சுசிலா மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மீனா, விஜயலெட்சுமி, வட்டாட்சியர் சரவணன், அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



இலங்கை கொழும்புவில் நடந்து வரும் கம்ப்லாஸ்ட் பிளாஸ்டிக் கண்காண்ட்சியில் சிமி பாலிமர்ஸ் அரங்கினை எஸ்.வி.சேகர் திறந்து வைத்தார்,உடன் அந்நிறுவன அதிகாரிகள்



தமிழக முதலமைச்சர் முயற்சியால் மண்டல 4க்கு உட்பட்ட 35 வது சென்னை தொடக்கப் பள்ளியில் காலை சிற்றுண்டி உணவு வழங்கும் நிகழ்ச்சி ஆர்.கே .நகர் மண்டல நாலு வட்ட 38 பட்டேல் நகர் சென்னை தொடக்கப்பள்ளியில் பள்ளி மாணவ மாணவிகளுக்கு காலை சிற்றுண்டி வழங்கியதினை நாடாளுமன்ற குழு தலைவர் நேதாஜி யு. கணேசன் தொடக்கி வைத்தார் உடன் எஸ் .எல். சுந்தர் ,எஸ். கிருஷ்ணன் ,ஜி. ராஜா, மெடிக்கல் ஆனந்தன், ஆர். சுந்தர்ராஜ் ,எஸ் ராஜா ,கே. சி. ராஜா, அணில் குமார், எஸ்.சோபனா,மற்றும் திமுக கட்சியினர் பொதுமக்கள் பள்ளி ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சரின் விரிவான காலை உணவு நேற்று காலை நாகப்பட்டினம் மாவட்டம் திருக்குவளை அரசு பள்ளியில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடக்கி வைத்த நிலையில் நேற்று சென்னை திருவொற்றியூர் 10வது வார்டுக்கு உட்பட்ட சன்னதி தெருவில் அமைந்துள்ள பெருநகர சென்னை மாநகராட்சியின் அரசு நடுநிலைப் பள்ளியில் திருவொற்றியூர் 1வது மண்டல குழு தலைவர் திருவொற்றியூர் கிழக்கு பகுதி செயலாளர் தி.மு.தனியரசு பள்ளி குழந்தைகளுக்கு காலை உணவை வழங்கி மற்றும் குழந்தைகளுடன் அமர்ந்து சாப்பிட்டார்



காரைக்கால் மாவட்டம் வரிச்சிக்குடி ஸ்ரீ வர சித்தி விநாயகர் ஆலயத்தில் எழுந்து அருளி அருள் பாவிக்கும் ஸ்ரீ துர்கை அம்மனுக்கு வர லெஷ்மிவிரத திரு விளக்கு பூஸை விழா நேற்று சிறப்பாக நடைபெற்றது பூஜையில் 150கும் மேற்பட்ட மகளிர் கலந்து கொண்டு திரு விளக்கு பூஜை செய்து வழிப்பட்டனர். பூஜையினை ஆலயஅர்சகர் அருண் செய்தார், நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை வரிச்சிக்குடி வர சித்தி விநாயகர் ஆலய நிருவாகிகள் செய்து இருந்தனர்

# பரசலூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் தமிழக முதல்வரின் காலை உணவு திட்டம் தொடக்கம்



தரங்கம்பாடி, ஆக- 26:

மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி தாலுக்கா செம்பனார்கோவில் ஊராட்சி ஒன்றியத்துக்கு உட்பட்ட பரசலூர் ஊராட்சியில் பரசலூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் தமிழ்நாடு முதல்வரின் காலை உணவு திட்டம் தொடங்கப்பட்டது.

பரசலூர் ஊராட்சி மன்ற தலைவர் சண்முகம் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக தேமுதிக மாவட்ட அவை தலைவரும் பரசலூர் ஒன்றிய கவுன்சிலருமான கே எஸ் கிருஷ்ணன் கலந்து கொண்டு தொடங்கி வைத்தார். இதில் பள்ளி தலைமை ஆசிரியர் வசந்தா, ஆசிரியர் ரமேஷ், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் அமுதா ஹிட்லர், தேமுதிக ஒன்றிய பொறுப்பாளர் சிவா, ஊராட்சி வார்டு உறுப்பினர் செல்வகுமார் மற்றும் ஊராட்சி செயலாளர், சத்துணவு ஊழியர்கள் பங்கேற்றனர்.

# ஆரணியில் மூன்று தொடக்கப் பள்ளிகளில் காலை உணவு திட்டம் துவக்கி வைக்கும் நிகழ்ச்சி





ஊத்துக்கோட்டை, ஆக26–

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசு தொடக்கப் பள்ளிகளிலும் விரிவுபடுத்தப்பட்ட காலை உணவுத் திட்டத்தை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று காலை நாகை மாவட்டம், திருக்குவளையில் தொடங்கி வைத்தார்.

தமிழகம் முழுவதும் 31,000 தொடக்கப் பள்ளிகளில் 1-ம் வகுப்பு முதல் 5-ம் வகுப்பு வரையில் படிக்கும் 17 லட்சம் மாணவ, மாணவியர்கள் பயன்பெறும் வகையில் இத்திட்டம் ரூ.500 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில், திருவள்ளூர் மாவட்டம், சோழவரம் ஒன்றியம், ஆரணியில் வடக்கு ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி,தெற்கு ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி,ஆதி திராவிட நல தொடக்கப்பள்ளி என மூன்று தொடக்கப் பள்ளிகளில் காலை உணவு திட்டத்தை துவக்கி வைக்கும் நிகழ்ச்சி நேற்று காலை நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு, ஆரணி பேரூர் திமுக செயலாளர் பி.முத்து தலைமை தாங்கினார். பேரூராட்சிமன்ற தலைவர் ராஜேஸ்வரி, நியமன குழு உறுப்பினர் டி.கண்ணதாசன், செயல் அலுவலர் கலாதரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில், திமுக மாநிலக் கொள்கை பரப்பு துணைச் செயலாளர் வக்கீல் வி.அன்புவாணன் கலந்து கொண்டு காலை உணவு திட்டத்தை துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், ஆரணி பேரூர் திமுக அவைத்தலைவர் வக்கீல் ரமேஷ், பொருளாளர் கு.கரிகாலன், துணைச் செயலாளர்கள் கலையரசி, வக்கீல் டி.கோபிநாத், காங்கிரஸ் கட்சி மாவட்ட பொதுச் செயலாளர் வக்கீல் அருண்குமார், பேரூராட்சி மன்றத் துணைத் தலைவர் வக்கீல் கே.சுகுமார், கட்சி நிர்வாகிகள் ஜி.ஆர். பார்த்திபன், டி.ஜெயக்குமார், புதுநகர் பாலாஜி, ஏ. ஆறுமுகம், சாய்சத்தியம், ஐ. டி.சந்தோஷ், பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் கே.கே. சதீஷ், சுபாஷினிரவி, சுகன்யா தினேஷ், பொன்னரசிநிலவழகன், குமார், அருணாநாகராஜ் உள்ளிட்ட மாவட்ட, ஒன்றிய, பேரூர், கிளைக் கழக நிர்வாகிகளும், சார்பு அணி நிர்வாகிகளும், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகளும் ஏராளமானோர் கலந்து கொண்டனர். முன்னதாக அனைவரையும் வடக்கு பள்ளியின் தலைமை ஆசிரியர் பாக்கியம், தெற்கு பள்ளியின் தலைமை ஆசிரியர் லட்சுமி, ஆதிதிராவிட நலப்பள்ளியின் தலைமை ஆசிரியர் எமிமால்அரசி ஆகியோர் வரவேற்றனர். முடிவில், சத்துணவு திட்ட அலுவலக பார்வையாளர் மணிமாறன் நன்றி கூறினார்.

# காஞ்சிபுரத்தில் திருநங்கைகளுக்கான உரிமைகள் விழிப்புணர்வு நடைபெற்றது



காஞ்சிபுரம் ,ஆக,26

காஞ்சிபுரம் மாவட்டம் வாலாஜாபாத் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் உள்ள கூட்டரங்கில் தமிழக பெண்கள் வழிகாட்டி இயக்கம் சார்பில் ஒருங்கிணைப்பாளர் வசந்தா ஏற்பாட்டில் மூன்றாம் பாலினத்தர்கள் ஏற்படும் சமூக பிரச்சனைகளும் விளைவுகளை எப்படி கையாளுவது, திருநங்கைகளுக்கான உரிமைகள் குறித்தும் விழிப்புணர்வு கருத்தரங்கம் நடைபெற்றது. இதில் மாநில மகளிர் ஆணைய தலைவர் குமாரி விஜய் குமார் துவக்கி வைத்தார். இதில் சுமார் 50க்கும் மேற்பட்ட திருநங்கைகள் கலந்து கொண்டு உரிமையும் வாழ்வியலும் விழிப்புணர்வை ஏற்படுத்திக் கொண்டனர்.

மேலும் தமிழகப் பெண்கள் இயக்கம் சார்பில் திருநங்கைகள் புதிய சட்டங்கள் உருவாக்குவதில் சட்டசபை, நாடாளுமன்ற மற்றும் ஊராட்சி, உள்ளாட்சி திருநங்கைகளுக்கு சட்டபூர்வமாக இட ஒதுக்கீடு வழங்க வேண்டும் எனவும் பொது மக்களுக்கு விழிப்புணர்வு தரும் வகையில் தெரிந்த வழி நிகழ்ச்சிகளில் ஏற்படுத்தி அந்தஸ்து அளிக்க வேண்டும் எனவும், சிறப்பு பாடத்திட்டத்திலேயே திருநங்கைகளைப் பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும், வாரியத்தின் மூலம் அடையாள அட்டை நியாய விலை கடை இலவச வீட்டு மனை பட்டா பெறுதல், உள்ளிட்ட திருநங்கைகளுக்கு உரிமைகளும் பற்றி கருத்தரங்கம் நடைபெற்றது.

மேலும் காலநிலை மாற்றங்களும் திருநங்கைகள் உரிமைகளும்என்றதொகுப்பில் நாங்கள் உங்களுடன் என்ற நூலை புத்தகமாக வெளியிட்டு திருநங்கைகள் மற்றும் பொதுமக்கள் என அனைவருக்கும் வழங்கப்பட்டன.

# தனியார் தொண்டு நிறுவனம் மூலம் ஒரு லட்சம் மரக்கன்றுகள் நடும் நிகழ்ச்சியினை மாவட்ட ஆட்சியர் துவக்கி வைத்தார்



காரைக்கால் ,ஆக,26

காரைக்காலில் ஹரா கார்டன் பவுண்டேஷன் என்ற தனியார் தொண்டு நிறுவனம் இயங்கி வருகிறது இதன் மூலம் காரைக்கால் மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் மக்களுக்கான சமூக நலப் பணிகளை மேற்கொண்டு வருகிறது.

இதன் ஒரு பகுதியாக உலக வெப்பமயமாதலை கட்டுப்படுத்தும் நோக்கில் காரைக்கால் மாவட்டம் முழுவதும் ஒரு லட்சம் மரக்கன்றுகளை நடுவதாக திட்டமிடப்பட்டு இத்திட்டத்தின் முதல் மரக்கன்றை மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன் காரைக்கால் நகராட்சி திடலில் நட்டு இந்நிகழ்ச்சியை துவக்கி வைத்தார்.

இதனைத் தொடர்ந்து படிப்படியாக ஒரு லட்சம் மரக்கன்றுகள் காரைக்கால் மாவட்டம் முழுவதும் நட உள்ளது. இந்நிகழ்ச்சியில் நிறுவனத் தலைவர் ஜாகீர் உசைன், துணைத் தலைவர் ராமலு, செயலாளர் செந்தில், தொழிலதிபர் விமல்ராஜ் உள்ளிட்ட ஏராளமான இயற்கை ஆர்வலர்கள் கலந்து கொண்டனர்.

# ஓணம் பண்டிகைக்கு எத்தனை மாவட்டங்களில் விடுமுறை?

சென்னை,ஆக,26

ஓணம் பண்டிகை நடப்பாண்டில் ஆகஸ்ட் 29ஆம் தேதி வரும் செவ்வாய் கிழமை வருகிறது.

கடந்தாண்டு சென்னை, கோவை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர், திருப்பூர், ஈரோடு, நீலகிரி, கன்னியாகுமரி ஆகிய 9 மாவட்டங்களுக்கு உள்ளூர் விடுமுறை வழங்கப்பட்டது.

நடப்பு ஆண்டில் இதுவரை சென்னை, கோவை, நீலகிரி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் உள்ள பள்ளி, கல்லூரி மற்றும் அரசு அலுவலகங்களுக்கு ஆகஸ்ட் 29ஆம் தேதி உள்ளூர் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

மீதமுள்ள மாவட்டங்களில் உள்ளூர் விடுமுறை வழங்குவது குறித்து பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.

# காரைக்கால் வேளாண் அறிவியல் நிலையத்தில் முயல் வளர்ப்பு குறித்து ஒரு நாள் பயிற்சி நடத்தப்பட்டது



காரைக்கால்,ஆக,26

காரைக்கால் வேளாண் அறிவியல் நிலையத்தில் பட்டியல் இன துணைத்திட்டத்தின் கீழ் அட்டவணை இனத்தைச் சார்ந்த விவசாயிகள் மற்றும் விவசாய மகளிர்களுக்காக முயல் வளர்ப்பு குறித்த ஒரு நாள் பயிற்சி அன்று நடத்தப்பட்டது.

இப்பயிற்சியை தொடங்கி வைத்து பேசிய வேளாண் அறிவியல் நிலையத்தின் முதல்வர் மற்றும் திட்ட ஒருங்கிணைப்பாளர் சீ. ஜெயசங்கர் கூறுகையில், எதிர்வரும் காலங்களில் விவசாயிகள் தங்கள் குடும்பத்தின் வருமானத்தை அதிகரிக்கவும் மகளிரின் முன்னேற்றத்தை ஊக்குவிக்கவும் பண்ணை மகளிர்கள் சுயதொழில் தொடங்க வேண்டும் என்றும் சத்தான உணவு தங்களின் குடும்பத்திற்கும் இந்த சமுதாயத்திற்கும் அளிக்க வேண்டிய கடமை மகளிருக்கு உள்ளது என்றும் கூறினார்.

மேலும், முயல் வளர்ப்பின் சிறப்பு அம்சங்கள், முயல்களை வளர்க்கும் முறைகள், குட்டிகள் மற்றும் இனவிருத்தி மேலாண்மை, தீவனப் பராமரிப்பு முறைகள் மற்றும் நோய் தடுப்பு முறைகள் குறித்து வேளாண் அறிவியல் நிலைய கால்நடை பிரிவு தொழில்நுட்ப வல்லுநர் மருத்துவர் பா. கோபு பயிற்சி அளித்தார்.

பயிற்சியில் 25க்கும் மேற்பட்ட அட்டவணை இனத்தைச் சார்ந்த விவசாயிகள் மற்றும் விவசாய மகளிர்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர். மேலும், பெங்களூரில் உள்ள கால்நடை தொற்று நோயியல் மற்றும் நோய் தகவல்களுக்கான தேசிய நிறுவனத்தின் நிதியுதவியுடன் தேர்வு செய்யப்பட்ட அட்டவணை இனத்தைச் சார்ந்த 22 பயனாளிகளுக்கு இரண்டு 10 லிட்டர் கொள்ளளவுள்ள பால் கேன்கள் பயிற்சியின் போது வழங்கப்பட்டது.



புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி அரசு பள்ளியில் முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தினை ஆலங்குடி பேரூராட்சி மன்றத் தலைவர் ராசி முருகானந்தம் தொடங்கி வைத்தார். நிகழ்ச்சியில் பேரூராட்சி துணைத் தலைவர் ராஜேஸ்வரி,செயல் அலுவலர் பாலசுப்ரமணியன், கவுன்சிலர்கள்,ஆசிரியர்கள், பெற்றோர் ஆசிரியர் சங்க நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# காரைக்கால் பாலிடெக்னிக் கல்லூரியில் நிதித்துறை தொடர்பான கல்வியறிவு விழிப்புணர்வு கருத்தரங்கம்



காரைக்கால் ,ஆக,26

காரைக்கால் பாலிடெக்னிக் கல்லூரியில் நிதித்துறை தொடர்பான கல்வியறிவு விழிப்புணர்வு கருத்தரங்கம் நேற்று நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு கல்லூரி முதல்வர் பிரான்சிஸ் தலைமை வகித்தார். தகவல் தொழில்நுட்பத்துறை தலைவி லட்சுமி வரவேற்புரை ஆற்றினார். சிறப்பு விருந்தினர்கள் லோகவிக்னேஸ்வரி மற்றும் விக்னேஷ் ஒருங்கிணைப்பாளர் மயிலாடுதுறை மாவட்டம் ஆர்த்தி ஸ்ரீ வித்யா மற்றும் காரைக்கால் மாவட்டம் ஒருங்கிணைப்பாளர் விமலா ஆகியோர் கலந்து கொண்டு மாணவர்களுக்கு நிதி கல்வியறிவை பரப்பும் வகையில் ரிசர்வ் வங்கி நாடு முழுவதும் 100 வட்டாரங்களில் நிதி கல்வியறிவு மையம் என்ற புதிய திட்டத்தை தொடங்கி செயல்படுத்தி வருகிறது என்றும் இதன் ஒரு பகுதியாக மாணவர்களுக்கு நிதி சேமிப்பு கடன் பணம் செலுத்துதல் காப்பீடு ஓய்வூதிய பணம் பரிவர்த்தனைகள் டிஜிட்டல் டிரான்ஸாக்ஷன் மற்றும் தங்களுடைய தனிப்பட்ட தகவல்களை பராமரிக்கவும் தங்கள் குடும்பத்தின் நிதி திட்டமிடல் மற்றும் வரவு செலவுகளை ஒழுங்கப்படுத்தல் தொடர்பான ஆலோசனைகளை வழங்கி கிராமப்புற மாணவர்கள் நிதி கல்வி பற்றி புரிந்து கொண்டு பயன் பெறும் வகையில் துண்டு பிரசுரங்கள் மற்றும் கையேடு வழங்கி கருத்தரங்கம் சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியின் அனைத்து ஏற்பாடினையும் நாட்டு நலப்பணித் திட்ட அதிகாரி மேகநாதன் சிறப்பாக செய்திருந்தார்'. நிகழ்ச்சியில் கல்லூரி விரிவுரையாளர்கள் முனைவர் சீனிவாசன், ஜெயபிரகாஷ், ரமணி, செல்வம், பழனிச்சாமி, ஜேசுராஜ், சரவணன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# “கனகராஜை ஜெயலலிதாவின் ஓட்டுநர் எனக் கூறினால் வழக்கு தொடருவோம்” இபிஎஸ் எச்சரிக்கை

மேட்டூர், ஆக.26–

"கனகராஜை ஜெயலலிதாவின் ஓட்டுநர் என இனி யாரும் சொல்லக் கூடாது. அவர் சசிகலாவின் ஓட்டுநராக இருந்தவர். ஜெயலலிதாவின் ஓட்டுநர் எனக் கூறினால் நீதிமன்றத்தின் வழியாக வழக்கு தொடர்வோம். ஜெயலலிதாவுக்கு கனகராஜ் ஒருநாள் கூட ஓட்டுநராக இல்லை" என அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

அதிமுக பொதுக்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் செல்லும் என சென்னை உயர் நீதிமன்றம் தீர்ப்பு அளித்தது. இதைத் தொடர்ந்து, அதிமுக பொதுச் செயலாளரும், எதிர்க்கட்சித் தலைவருமான பழனிசாமி தனது சொந்த ஊரான சேலம் மாவட்டம் எடப்பாடியை அடுத்த சிலுவம்பாளையத்தில் தொண்டர்கள் மற்றும் பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினார்.

பின்னர் செய்தியாளர்களிடம் அவர் கூறியது "அதிமுக பொதுக்குழு தொடர்பான உயர்நீதிமன்ற தீர்ப்பு நீதி, தர்மம், உண்மைக்கு கிடைத்த வெற்றி. அதிமுக பலமாக உள்ளது. மக்களவைத் தேர்தலில் மிகப் பெரிய வெற்றியை அதிமுக பெறும். தேசிய அளவில் தேசிய ஜனநாயக கூட்டணியில் அதிமுக அங்கம் வகிக்கிறது. தமிழகத்தில் அதிமுக தலைமையில் கூட்டணி இருக்கும். இந்தக் கூட்டணி மகத்தான வெற்றிபெறும்.

கோடநாடு வழக்கில் என்னை சம்பந்தப்படுத்திப் பேசுவது தவறான விஷயம். ஓர் ஆட்சிஇருக்கும்போதுபல்வேறு சம்பவங்கள் நடைபெறும். அந்தச் சம்பவத்தை சட்டரீதியாக அரசு அணுகி நடவடிக்கை எடுத்துள்ளது. இன்றைய ஆட்சியாளர்கள் அவர்களுக்கு சாதகமாக சூழ்ச்சி செய்கின்றனர், அது ஒருபோதும் நடக்காது. கனகராஜின் சகோதரர் தனபால் பல்வேறு வழக்குகளில் தொடர்புடையவர். இன்றைய ஆட்சியாளர்களே விசாரணைக்கு அழைத்துச் சென்று 3 மாதங்கள் சிறையில் அடைத்தனர். நில அபகரிப்பில் குற்றம் சாட்டப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டு ஜாமீனில் வந்தவர்.



கனகராஜை ஜெயலலிதாவின் ஓட்டுநர் என இனி யாரும் சொல்லக் கூடாது. அவர் சசிகலாவின் ஓட்டுநராக இருந்தவர். ஜெயலலிதாவின் ஓட்டுநர் எனக் கூறினால் நீதிமன்றத்தின் வழியாக வழக்கு தொடர்வோம். ஜெயலலிதாவுக்கு கனகராஜ் ஒருநாள் கூட ஓட்டுநராக இல்லை. ஒரு குற்றவாளியை, முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவுக்கு கார் ஓட்டுநராக இருந்தவர் எனக் கூறுவது தவறு. கோடநாடு வழக்கு நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது. அதைப் பற்றி பேசுவதே தவறு.

மக்களவைத் தேர்தலுக்கு இன்னும்9மாதங்கள் உள்ளன. தேர்தலுக்கான அடிப்படை பணிகளை மேற்கொண்டு வருகிறோம். இந்தியாவே மதுரையை நோக்கி திரும்பிப் பார்க்கும் எழுச்சி மாநாடு சிறப்பாக நடைபெற்றது. தென்மாவட்டத்தில் நடத்த முடியாது என்று கூறிய, நிலையில் 15 லட்சம் பேர் கலந்து கொண்டனர். தமிழக வரலாற்றில் எந்த ஒரு கட்சிக்கும் தொண்டர்கள், நிர்வாகிகள், மக்கள் கலந்து கொண்டது இல்லை. அதிமுக ஒன்றாக இருக்கிறது என்று மாநாட்டின் மூலம் நிரூபித்துள்ளோம். நீதிமன்றம், தேர்தல் ஆணையம் மூலமாக தீர்ப்பு பெற்றுள்ளோம்.

சந்திரயான்-3 நிலவில் தரை இறங்கியது நாட்டுக்கு கிடைத்த வெற்றி. தமிழக விஞ்ஞானிகள் மற்ற நாட்டை சேர்ந்தவர்களுக்கு சலித்தவர்கள் அல்ல என நிரூபணமாகியுள்ளது. தமிழகத்தை சேர்ந்த ஒருவர் முன்னே நின்று நிகழ்வை நிகழ்த்தியுள்ளார். இது இந்தியாவுக்கு கிடைத்த பெருமை.

ஒரு சிலரை தவிர்த்து அதிமுகவுக்கு உழைத்தவர்கள் பிரிந்து சென்றிருந்தால் கட்சிக்குக்குள் வர நினைத்தால் இணைத்துக் கொள்வோம். சிலர் கட்சி ரீதியாக வளர்ந்து அதிகாரத்துக்கு வந்து எப்படி இருக்கின்றனர் என தெரியும். கட்சி மூலமாக வளர்ந்தவர்கள் கட்சிக்கு துரோகம் செய்துள்ளனர். இன்றைய ஆளுங்கட்சியுடன் சேர்ந்து அதிமுகவை அழிக்க நினைத்தவர்கள், எட்டப்பராக செயல்பட்டவர்களுக்கு கட்சியில் இடம் இல்லை” என்றார் எடப்பாடி பழனிசாமி.

# புதுக்கோட்டை சென்ட்ரல் ரோட்டரி சங்கத்தினர் நடத்திய சிறப்பு குழந்தைகளுடன் ஒரு நாள் நிகழ்ச்சி

புதுக்கோட்டை, ஆக.26–

புதுக்கோட்டை சென்ட்ரல் ரோட்டரி சங்கத்தின் சார்பாக ரோட்டரி மாவட்டம் 3000த்தின் சிறப்பு திட்டமான “மகிழ்ந்திரு மகிழ்வித்திரு” என்கிற தலைப்பில் சிறப்பு குழந்தைகளுடன் ஒரு நாள் என்கிற நிகழ்ச்சி சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூரில் இயங்கிவரும் டி.இ.எல்.சி பார்வையற்றோர் பள்ளி வளாகத்தில் நடைபெற்றது.



இதில் சங்கத்தின் தலைவர் பொறியாளர் கார்த்திகேயன் தலைமை தாங்கினார். பள்ளியின் தலைமை ஆசிரியை மீனா வரவேற்புரையாற்றினார். ரோட்டரி விருதுகள் குழு உறுப்பினர் அறந்தாங்கி கராத்தே கண்ணையன் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு சிறப்புரை நிகழ்த்தினார். ரோட்டரி துணை ஆளுநர் கதிரேசன், முனைவர் ஜெய்சன் கீர்த்தி ஜெயபாரதன் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாக கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் சிறப்பு குழந்தைகளின் பாட்டு, நடனம், இசை உள்ளிட்ட பல்வேறு கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன. அனைத்து குழந்தைகளுக்கும் சீருடைகள், புத்தகப் பைகள், இனிப்பு கார வகைகள் வழங்கப்பட்டது. ரோட்டரி உறுப்பினர்கள் குழந்தைகளோடு விளையாடி அவர்களை மகிழ்வித்தனர். பங்கேற்ற அனைத்து சிறப்பு குழந்தைகளும் மிகுந்த மகிழ்ச்சியடைந்தனர். இந்த நிகழ்வில் ரோட்டரி முன்னாள் தலைவர்கள், உறுப்பினர்கள், பள்ளி ஆசிரியைகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

இந்நிழ்ச்சிக்கான ஏற்பாடுகளை திட்டத் தலைவர் ஓவியர் ரவி, திட்ட இயக்குனர் கணேசன், முனைவர் சீனிவாசன் ஆகியோர் செய்திருந்தனர். நிறைவில் சங்கத்தின் செயலாளர் எஸ்கேஎம் சரவணன் நன்றி கூறினார்.

## அறந்தாங்கி அரசுப்பள்ளியில்

# வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல் நீக்குதல் திருத்தம் செய்தல் தொடர்பான விழிப்புணர்வு கூட்டம்

அறந்தாங்கி, ஆக.26–

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட அறந்தாங்கி அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் இளம் வாக்காளர்கள் சேர்த்தல், வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றுள்ள நபர்களின் பெயர்களை நீக்குதல்,திருத்தம் குறித்த விழிப்புணர்வு கூட்டம் நடத்தப்பட்டது.



இந்த கூட்டத்தில் கலந்து கொண்ட பள்ளி மாணவர்களுக்கு தேர்தல் கல்வியறிவு குழு குறித்த விழிப்புணர்வு மற்றும் தேர்தல் விழிப்புணர்வு தொடர்பான புத்தகங்கள் வழங்கப்பட்டது.

அறந்தாங்கி வருவாய் கோட்டாட்சியர் ஜஸ்டின் ஜெயபால் தலைமையில் நடைபெற்ற இந்த கூட்டத்தில் வட்டாட்சியர் பாலகிருஷ்ணன் தேர்தல் துணை வட்டாட்சியர் (பொ) எம்.பாலமுருகன் வருவாய் ஆய்வாளர் மதியழகன் தலைமை ஆசிரியர் கார்த்திகா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



தென்காசி மாவட்டம் புளியங்குடியில் முதலமைச்சரின் காலை உணவு திட்டம் நேற்று முதல் மாநிலம் முழுவதும் நகராட்சி மாநகராட்சி ஒன்றியத்தில் உள்ள அரசு பள்ளிகளில் ஒன்று முதல் ஐந்து வரை உள்ள பள்ளிகளுக்கு முன்னாள் தமிழக முதலமைச்சர் கருணாநிதி பெயரில் தொடங்கப்பட்டுள்ளது. புளியங்குடி நகராட்சி தைக்கா நடுநிலைப்பள்ளியில் காலை உணவு திட்டத்தை நகர் மன்றத் தலைவர் விஜயா சௌந்தர பாண்டியன் தலைமையில் துணை நகர்மன்ற தலைவர் அந்தோணிசாமி முன்னிலையில் தொடங்கி வைக்கப்பட்டது மேலும் நகராட்சி பள்ளிகளுக்கு வழங்கப்படும் உணவு வண்டியை கொடி அசைத்து துவங்கி வைத்தனர். இந்நிகழ்ச்சியில் நகர்மன்ற உறுப்பினர்கள் வள்ளி அண்ணாமலை, மாவட்ட பிரதிநிதி சுரேஷ், ஷேக் மைதீன், சுகாதார ஆய்வாளர் கணேசன், மேலாளர் செந்தில் முருகன் மற்றும் திராவிட முன்னேற்றக் கழக நிர்வாகிகள் தொண்டர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# ஆவுடையார்கோவில் அருகே குண்டகவயல் கிராமத்தில் வேளாண் விஞ்ஞானிகள் விவசாயிகளுடன் கலந்துரையாடல்

ஆவுடையார்கோவில், ஆக.26–

புதுக்கோட்டை மாவட்டம் ஆவுடையார்கோவில் தாலுகா குண்டகவயல் கிராமத்தில்வட்டாரவேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை, முகமை மாநில விரிவாக்க திட்டத்தின் உறுதுணை சீரமைப்பு திட்டத்தின் கீழ்குண்டகவயல் கிராமத்தில் விவசாயிகளுடன் வேளாண் விஞ்ஞானிகள் கலந்துரையாடல் நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது.



இந்நிகழ்ச்சிக்கு ஆவுடையார்கோவில் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் சவிதா தலைமையில் விவசாயிகள் மற்றும்வேளாண் விஞ்ஞானிகள் இணைந்துதற்பொழுது விவசாயத்தில் தேவைப்படும் தொழில்நுட்பம் குறித்து கலந்துரையாடினர்.இந்த கலந்துரையாடலுக்கு வம்பன் வேளாண்அறிவியல் நிலையத்திலிருந்து பாலமுரளி (தொழில்நுட்ப வல்லுநர்) கலந்துகொண்டு கள ஆய்வு செய்து விவசாயிகளுக்கு ஏற்படும் பிரச்சனைகளுக்கு தீர்வு குறித்து பேசினார்.

மேலும் கோடை உழவு செய்வதின் நன்மைகள்,மண் மாதிரி முக்கியத்துவம், தண்ணீரை எப்படி சிக்கனமாக சேமிப்பது,நெற்பயிரில் ஏற்படும் நோய்கள் மற்றும் பூச்சி தொல்லைகளை எப்படி கட்டுப்படுத்துவது என்பது குறித்தும், இயற்கை விவசாயத்தின் நன்மைகள் குறித்தும் கலந்துரையாடினர், முன்னதாக வட்டாரதொழில்நுட்ப மேலாளர் ஜகுபர் அலி வரவேற்று பேசினார், நிகழ்ச்சி முடிவில் உதவி தொழில் நுட்ப மேலாளர் கீர்த்திகா நன்றி கூறினார், நிகழ்ச்சி ஏற்பாடுகளை உதவி தொழில்நுட்ப மேலாளர் இராமநாதன் செய்திருந்தார், நிகழ்ச்சியில் 50க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.



அரியலூர் மாவட்டம், செந்துறை தாலுக்கா, குழுமூர் கிராமத்தில் உள்ள, ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில், முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தை, தமிழக போக்குவரத்து துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தொடங்கி வைத்தார், அருகில் மாவட்ட ஆட்சியர் ஆனி மேரி ஸ்வர்ணா உள்ளார்.

# தா பழூர் ஒன்றிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் விக்கிரமங்கலம் அரசுப்பள்ளிக்கு ஒட்டு மொத்த சாம்பியன் பட்டம்

அரியலூர், ஆக.26–

தத்தனூர் எம் ஆர் சி கல்வி நிலைய வளாகத்தில் நடைபெற்ற, தா பழூர் ஒன்றிய அளவிலான விளையாட்டுப் போட்டியில், விக்கிரமங்கலம் அரசு பள்ளி ஒட்டுமொத்த சாம்பியன் பட்டத்தை வென்றது. இது பற்றி, தத்தனூர் எம் ஆர் சி கல்வி நிலையம் சார்பில் வெளியிடப்பட்ட செய்தி குறிப்பில் கூறியுள்ளதாவது:



தமிழ்நாடு அரசு பள்ளிக் கல்வித் துறை சார்பாக, அரியலூர் மாவட்டம், தா.பழூர் ஒன்றிய அளவிலான குடியரசு தினவிழா குறுவட்ட, இரண்டு நாள் தடகள விளையாட்டுப் போட்டிகள், தத்தனூர் மீனாட்சி இராமசாமி கலை மற்றும் அறிவியல் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. தொடக்கவிழா நிகழ்ச்சிக்கு, மீனாட்சி இராமசாமி கல்வி நிறுவனங்களின் இயக்குனர் ஆர். இராஜமாணிக்கம் முன்னிலை வகித்தார்.

செயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன் விளையாட்டுப் போட்டிகளை தொடங்கி வைத்து பேசினார். நிகழ்ச்சியில் தா.பழூர் ஒன்றிய அளவிலான பல்வேறு பள்ளிகளில் இருந்து 750 மாணவ, மாணவியர்கள் கலந்துகொண்டு நீளம் தாண்டுதல், உயரம் தாண்டுதல், வட்டு வீசுதல், குண்டு எறிதல், 100, 200, 400 மீட்டர் ஓட்டப்பந்தயம் உள்பட பல்வேறு போட்டிகளில் பங்கேற்று விளையாடினர், வெற்றி பெற்ற அணிகளுக்கு பரிசுகளும் கோப்பைகளும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டது.

14 வயதிற்கு உட்பட்ட ஆண்களுக்கான போட்டிகளில் தனிநபர் கோப்பையை சுத்தமல்லி அரசு மேல்நிலைப்பள்ளி மாணவன் சச்சின் மற்றும் விக்கிரமங்கலம் அரசு மேல்நிலைப்பள்ளி மாணவன் கௌதம் ஆகியோர் வென்றனர், பெண்களுக்கான 14 வயதிற்கு உட்பட்ட தனிநபர் கோப்பையை நாயகனைபிரியாள் பள்ளி மாணவி ஆர்த்தி வென்றார்

17 வயதிற்கு உட்பட்ட போட்டிகளில் தனிநபர் கோப்பையை விக்கிரமங்கலம் அரசு மேல்நிலைப்பள்ளி மாணவன் அஜித், அதே பள்ளி மாணவி ரம்யா ஆகியோர் வென்றனர், 19 வயதுக்கு உட்பட்ட போட்டிகளில் தனிநபர் கோப்பையை விக்கிரமங்கலம் அரசு மேல்நிலைப்பள்ளி மாணவன் இராஜப்பிரியன், மாணவி அனுசுயா ஆகியோர் வென்றனர், ஒட்டுமொத்த விளையாட்டுகளுக்கான சாம்பியன் ஷிப் பட்டத்தையும் கோப்பையையும் விக்கிரமங்கலம் அரசு மேல்நிலைப்பள்ளி மாணவ, மாணவியர்கள் வென்றனர்

வெற்றிபெற்ற மாணவ மாணவியருக்கு மீனாட்சி இராமசாமி கல்வி நிறுவனங்களின் தாளாளர் எம்.ஆர். இரகுநாதன், இயக்குனர் முனைவர் ஆர். இராஜமாணிக்கம் ஆகியோர் பரிசுகளையும் வெற்றிக்கோப்பையையும் வழங்கி பாராட்டினர், முடிவில் விக்கிரமங்கலம் அரசுமேல்நிலைப்பள்ளி உடற்கல்வி ஆசிரியர் வினோத்குமார் நன்றி கூறினார்.

## திருமயத்தில் உள்ள பெல் நிறுவனத்தின்

# சமூக சேவை அறக்கட்டளையின் மூலமாக பரிசளிப்பு மற்றும் மரக்கன்றுகள் நடும் விழா

திருமயம், ஆக.26–

புதுக்கோட்டை மாவட்டம் திருமயத்தில் இயங்கிவரும்பாரதமிகுமின் நிறுவனத்தில் பணிபுரியும் ஊழியர்கள் ஒன்றிணைந்து செயல்படுத்தி வரும் பாரத மிகுமின் நிறுவன ஊழியர்களின் சமூக சேவை அறக்கட்டளையின் மூலமாக புதுக்கோட்டை மற்றும் சிவகங்கை மாவட்டத்தில் உள்ள இயற்கை வளங்களை மேம்படுத்தும் விதமாக சுற்றுச்சூழல் என்ற ஒரு குழுவை அறக்கட்டளையில் ஏற்படுத்தி பல்வேறு சேவைகளை செய்து வருகிறது அது மட்டும் இல்லாமல் பொதுமக்களுக்கும் மாணவர்களுக்கும் நிறுவனத்தில் பணிபுரியக்கூடிய ஊழியர்களுக்கும்பல்வேறு விதமான விழிப்புணர்வு நிகழ்ச்சிகளையும் நடத்தி வருகிறது அதன் தொடர்ச்சியாக , புதுக்கோட்டைமாவட்டம் ஊனையூரில்அமைந்துள்ள பிச்சையப்பா நடுநிலைப்பள்ளியில் பயிலும் மாணாக்கர்களுக்கு சுற்றுச்சூழல் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதமாக நடைபெற்ற பன்திறன் போட்டிகளில் வெற்றி பெற்றமாணாக்கர்களுக்கு பரிசளிப்பு நிகழ்ச்சியும், அதனைத்தொடர்ந்து மரக்கன்றுகள் நடும் நிகழ்ச்சியும்மிகச்சிறப்பாக நடைபெற்றது.

நிகழ்ச்சியினை அறக்கட்டளையின் நிர்வாகிகளும் பள்ளித் தலைமையாசிரியர், ஆசிரியர்களும், மாணாக்கர்களும் இணைந்து சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர். இந்நிகழ்ச்சியில் பள்ளித் தலைமை ஆசிரியர் அறக்கட்டளையின் தலைவர் பாலாஜி பொதுச்செயலாளர் சதன்குமார் குழுத்தலைவர் நல்லசிவன் ஆகியோர் தலைமை வகித்தார்கள்.

நிகழ்ச்சியில் பங்கேற்றவர்களை பள்ளி தலைமை ஆசிரியர் ம.கருணைமேரி வரவேற்புரை கொடுத்து வரவேற்றார், சுற்றுச்சூழல் மற்றும் இயற்கை விழிப்புணர்வு பற்றி அறக்கட்டளையின் பொதுச்செயலாளர் சதன்குமார் சிறப்புரை வழங்கினார். அறக்கட்டளையின் சுற்றுச்சூழல் குழுத் தலைவர் நல்லசிவன் நமது அறக்கட்டளை பற்றி மாணவர்களுக்கு எடுத்துரைத்தனர், இந்நிகழ்ச்சியில் அறக்கட்டளை அழைப்பினை ஏற்று கணேசன்,சிதம்பரம், கௌதமன், சுதர்சனன், விஜயகுமார் ஆகியோர் பங்கேற்று சிறப்பித்தனர்.

இந்நிகழ்ச்சியில் பள்ளி ஆசிரியர்கள் சீனிவாசன்,ஜஸ்டீன் சுமதி ஆகியோர் பங்கேற்றனர், நிகழ்ச்சியின் இறுதியில் பள்ளியின் ஆசிரியர் சீனிவாசன் மரக்கன்றுகள் வைத்துக்கொடுக்க உதவியாக இருந்த நமது அறக்கட்டளையின் ஒவ்வொரு உறுப்பினர்களுக்கும் நன்றிகள் கூறினார்

இவ்வளவு சிறப்பான அறக்கட்டளைதொடர்ந்து இந்த மண்ணுக்கும் மனிதர்களுக்கும் சேவை செய்திட வேண்டும்என்று கேட்டுக்கொண்டார்.

# நேரடியாகவோ, மறைமுகமாகவோ சூதாட்ட விளம்பரங்கள் கூடாது மத்திய அரசு எச்சரிக்கை

புதுடெல்லி, ஆக.26–

சூதாட்டம் குறித்த நேரடி மற்றும் மறைமுக விளம்பரங்களை அனுமதிக்க வேண்டாம் என்று ஊடக நிறுவனங்களுக்கு தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சகம் அறிவுறுத்தியுள்ளது. இதைக் கடைபிடிக்கத் தவறினால், உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: ஊடக நிறுவனங்கள், ஆன்லைன் விளம்பர இடைத்தரகர்கள் மற்றும் சமூக ஊடகத் தளங்கள் உள்ளிட்ட அனைத்து சம்பந்தப்பட்ட பிரிவினர்களையும், எந்தவொரு வடிவத்திலும் பந்தயம், சூதாட்டம் குறித்த விளம்பரங்கள், விளம்பர உள்ளடக்கத்தைக் காட்டுவதைத் தவிர்க்குமாறு தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சகம் இன்று அறிவுறுத்தியுள்ளது. இந்த அறிவுரையைக் கடைப்பிடிக்கத் தவறினால், பல்வேறு சட்டங்களின் கீழ் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சூதாட்ட, பந்தய தளங்களின் விளம்பரங்கள் நுகர்வோருக்கு, குறிப்பாக இளைஞர்கள் மற்றும் குழந்தைகளுக்கு, நிதி மற்றும் சமூகப் பொருளாதார ஆபத்தை ஏற்படுத்துகின்றன. சூதாட்டப் பயன்பாடுகளின் பயனர்களிடமிருந்து கணிசமான பணத்தை வசூலித்த முகவர்களின் நெட்வொர்க்குக்கு எதிராக சமீபத்தில் மத்திய அரசு நடவடிக்கை மேற்கொண்டது. இந்தப் பொறிமுறை பணமோசடி நெட்வொர்க்குகளுடன் தொடர்புகளைக் கொண்டுள்ளது. இதனால் நாட்டின் நிதி பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் உள்ளது.



இந்த சட்டவிரோத நடவடிக்கைகளுடன், இதுபோன்ற விளம்பரங்களுக்கு பணம் செலுத்த கருப்புப் பணம் பயன்படுத்தப்படுவதற்கான வாய்ப்பும் அதிகம். அந்த வகையில், கிரிக்கெட் போட்டிகள் உள்ளிட்ட முக்கிய விளையாட்டு நிகழ்வுகளின்போது சூதாட்டம் மற்றும் சூதாட்டத் தளங்களின் நேரடி மற்றும் மறைமுக விளம்பரங்களை விளம்பர இடைத்தரகர்கள் மற்றும் சமூக ஊடகத் தளங்கள் உள்ளிட்ட சில ஊடக நிறுவனங்கள் அனுமதித்து வருகின்றன. மேலும், குறிப்பாக கிரிக்கெட் போன்ற ஒரு பெரிய விளையாட்டு நிகழ்வின் போது இதுபோன்ற பந்தயம் மற்றும் சூதாட்ட தளங்களை ஊக்குவிக்கும் போக்கு இருக்கிறது. அத்தகைய ஒரு முக்கியமான சர்வதேச நிகழ்வு இன்னும் சில நாட்களில் தொடங்குகிறது.

பந்தயம், சூதாட்டத் தளங்களை விளம்பரப்படுத்துவதற்கு எதிராக ஊடக தளங்களை எச்சரிக்க அமைச்சகம் ஆலோசனைகளை வழங்கியுள்ளது. ஆன்லைன் விளம்பர இடைத்தரகர்கள் இந்திய பார்வையாளர்களைக் குறிவைத்து இதுபோன்ற விளம்பரங்களை வெளியிட வேண்டாம் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதற்காக 13.06.2022, 03.10.2022 மற்றும் 06.04.2023 ஆகிய நாட்களில் அமைச்சகத்தால் ஆலோசனைகள் வெளியிடப்பட்டுள்ளன. சூதாட்டம் மற்றும் பந்தயம் ஒரு சட்டவிரோத நடவடிக்கை. எனவே எந்தவொரு ஊடகத் தளத்திலும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அத்தகைய நடவடிக்கைகளை விளம்பரப்படுத்துவது மற்றும் ஊக்குவித்தல் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம், 2019, பிரஸ் கவுன்சில் சட்டம் 1978 உள்ளிட்ட பல்வேறு சட்டங்களுக்கு முரணானது.

மேலும், தகவல் தொழில்நுட்ப (இடைநிலை வழிகாட்டுதல்கள் மற்றும் டிஜிட்டல்ஊடகநெறிமுறைகள் குறியீடு) விதிகள், 2021 இன் சமீபத்தில் திருத்தப்பட்ட விதி 3 (1) (பி), இடைத்தரகர்கள் தாங்களாகவே நியாயமான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். மேலும் அதன் கணினி வளத்தைப் பயன்படுத்துபவர்கள், விளையாட்டு பற்றிய எந்தவொரு தகவலையும் வழங்கவோ, அதனை தூண்டும் வகையில் காட்சிப்படுத்தவோ, பதிவேற்றவோ, திருத்தவோ, வெளியிடவோ, அனுப்பவோ, சேமிக்கவோ, புதுப்பிக்கவோ அல்லது பகிரவோ கூடாது என்று கூறுகிறது என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.



# காலை உணவு வழங்கும் விரிவாக்க திட்டம்: திருக்குவளையில் துவக்கம்

# குற்றாலத்தில் வெடித்து சிதறிய சிலிண்டர்கள் : கடைகள் சாம்பல்





# கனகராஜை ஜெயலலிதாவின் ஓட்டுநர் எனக் கூறினால் வழக்கு


சென்னை / புதுக்கோட்டை | 26.08.2023 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10

புதுகை வரலாறு நாளிதழ்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

திரு. வி. கலியாணசுந்தரனார் , தமிழறிஞர் (பி.1883) (இ.1953)



அ. அமிர்தலிங்கம் , ஈழத்து அரசியல்வாதி (பி.1927) (இ.1989)



அ. ஜெ. கனகரத்னா , ஈழத்து இலக்கியவாதி (பி.1934) (இ.2006)



மேனகா காந்தி , இந்திய அரசியல்வாதி (பி.1956)



## இன்றைய நினைவு நாள்

எஸ். எஸ். வாசன் , தென்னிந்தியத் திரைப்படத் தயாரிப்பாளர் (பி.1904) (இ.1969)



அபலா போஸ் , வங்காள சமூக சேவகர் (பி.1864) (இ.1951)



மா. ரா. , எழுத்தாளர், தமிழ்த் திரைப்பட கதை வசனகர்த்தார் (இ.2014)

